


# மிஃராஜ் -
# மாநபி கண்ட காட்சிகள்

உலகம் தேன்றிய காலத்திலிருந்தே எல்லா நபிமார்களாலும் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட நபியாகத் திகழ்ந்தார்கள் பெருமானார் (ஸல்) அவர்கள். முன் சென்ற வேதங்கள் எல்லாம் அவர்களை வர்ணித்தன. பிறப்பிற்கு முன்பே எதிர்பார்க்கப்பட்ட நபியாக இந்த உலகத்தில் அவதரித்தார்கள். தாயின் கருவறையில் சஞ்சரித்த போது ஆமினா அம்மையார் கர்ப்பத்தின் சுமையையோ பிரசவித்த போது பிரசவ வேதனையையோ உணராமல் அற்புதக் குழந்தையாகவே அவனியில் தரித்தார்கள்.

பிறப்பின் போதே பல அதிசயங்கள் கலிமா விரலை உயர்த்தி, கத்னா செய்யப்பட்டு, சுர்மா இடப்பட்ட நிலையில்தான் பிறந்தார்கள். உம்மி நபியென்று பெயர் பெற்ற பெருமானார், அறியாமை நிரம்பியிருந்த அரபகத்து மண்ணில் அறிவொளியைப் பாய்ச்சினார்கள். வெற்றி வேந்தராக புரட்சிப் புயலாக உருவெடுத்து பூலோக வரலாற்றை மாற்றி எழுதினார்கள். வரலாறுகளைப் படிக்கும் பழக்கம் அவர்களுக்கில்லை. ஆனால் பல பேர் படிக்கும் வரலாறாக மாறிப் போனார்கள்.

அரபக மண்ணில் தோன்றிய ஈமானியப் பேரொளி, சன்னஞ்சன்னமாகப் பரவி இன்று அகிலத்தையே ஆட்கொண்டுள்ளது. நபியின் இறுதிப் பேருரையில் 1,24,000 மாக இருந்த முஸ்லிம்களின் எண்ணிக்கை இன்றைக்கு உலகளாவிய அளவில் சுமார் 200 கோடியைத் தாண்டியிருக்கிறது. உலகில் நான்கில் ஒருவர் முஸ்லிம் என்கிற அளவுக்கு மிகப்பெரும் மனித சக்தி கொண்ட மார்க்கமாக இஸ்லாம் உருவெடுத்திருக்கிறது.

நபிமார்களின் வரிசையில் இறுதியாகத் தோன்றிய முத்து நபி (ஸல்) அவர்கள் பல்வேறு சிறப்பம்சங்கள் பெற்றிருந்தார்கள். ஒரு ஹதீஸில் 'மறுமை நாளில் ஆதமின் மக்கள் அனைவருக்கும் தலைவன் நானே. முதன் முதலில் மண்ணறை பிளந்து எழுபவனும் நானே. முதன் முதலில் பரிந்துரை செய்பவனும் நானே. முதன் முதலில் பரிந்துரை ஏற்கப்படுபவனும் நானே!'

– **முஸ்லிம்**

வாழும் காலத்திலேயே மறுமையைப் பார்க்கும் வாய்ப்பும் அவர்களுக்கு கிட்டியது. மண்ணகம் வியந்து பார்க்கும் விண்ணுலகப் பயணமும் அண்ணல் நபிக்கு மட்டும் சாத்தியமானது. நபியின் வாழ்வை புரட்டிப் போட்ட இருபெரும் சோக நிகழ்வுகள், அன்பு மனைவி கதீஜா, அருமைத் தந்தை அபூதாலிபின் இழப்பு பேரிழப்பாக மாறிட சொல்லெணாத் துயரங்களுக்கு ஆட்பட்ட அல்லாஹ்வின் தூதருக்கு ஆறுதல் சொல்லிட பலர் முன் வந்த போதும் கூட யாராலும் அவர்களைத் தேற்ற முடியவில்லை.

தன் ஹபீபின் மனதிற்கு தானே மருந்திட நாடினான். மாபெரும் மருத்துவன். மண்ணுலகம் தாண்டி தன்னுலகம் வரவழைக்க புராக்கெனும் தேரனுப்பி ஜிப்ரீலெனும் தூதரனுப்பி மிஃராஜெனும் விசித்திரப் பயணம் அரங்கேறியது. அல்குர்ஆனில் அல்லாஹ் மிஃராஜுடைய வரலாற்றைச் சொல்ல வரும் போது சூரா பனீ இஸ்ராயீலின் துவக்கத்தில் 'சுப்ஹானல்லதீ' எனத் துவங்குகிறான். பொதுவாக 'சுப்ஹானல்லாஹ்' எனும் வார்த்தை ஆச்சரியான செய்தியைக் கேள்விப்படும்போது பயன்படுத்துவோம். அதுபோல்

மிஃராஜும் ஆச்சரியத்திற்குரிய செய்தி என்பதை சூசகமாக அல்லாஹ் சுட்டிக்காட்டுகிறான்.

سُبْحَانَ الَّذِي أَسْرٰى بِعَبْدِهِ لَيْلًا مِّنَ الْمَسْجِدِ الْحَرَامِ إِلَى الْمَسْجِدِ الْأَقْصَى الَّذِي بَارَكْنَا حَوْلَهُ لِنُرِيَهُ مِنْ اٰيَاتِنَا

அருள்மறையில் '(அல்லாஹ்) மிகப் பரிசுத்தமானவன். அவன்தான் அடியாரை பைத்துல் ஹராமிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான். (மஸ்ஜிதுல் அக்ஸாவின்) சுற்றுப் புறங்களை நாம் அபிவிருத்தி செய்திருக்கின்றோம். நம்முடைய அத்தாட்சிகளை அவருக்குக் காண்பிப்பதற்காக.

**– அல்குர்ஆன் 17 : 01**

**மாநபி கண்ட காட்சிகள்**

மிஃராஜுடைய பயணத்தில் பல்வேறு காட்சிகளைக் கண்டார்கள் கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள். 'மக்காவிலிருந்து பைத்துல் முகத்தஸிற்கு செல்லும் வழியில் சிவப்பு மலைக்குன்று அருகே ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களை கப்ரில் தொழக்கண்டேன்' என்கிறார்கள். இறந்த போதிலும் நபியவர்கள் கப்ரில் உயிரோடு வாழ்கிறார்கள் என்பது இதன் மூலம் தெரிகிறது.

மற்றொரு ஹதீஸில்...

اِنَّ اللّٰهَ عَزَّ وَجَلَّ حَرَّمَ عَلَى الْاَرْضِ اَجْسَادَ الْاَنْبِيَاءِ

நபியவர்களின் உடல்களை சாப்பிடுவதை பூமிக்கு அல்லாஹ் தடை செய்து விட்டான்.

பைத்துல் முகத்தஸிலிருந்து புராக் வாகனத்தில் வானவர் ஜிப்ரயீலோடு பயணப்பட்ட சத்திய தூதர் (ஸல்) அவர்கள் ஏழு வானங்களைக் கடந்து சித்ரஸத்துல் முன்தஹாவை அடைந்தார்கள். அங்கு பிரம்மாண்டமான இலந்தை மரம் ஒன்றிருந்தது. அதனடியில் நான்கு ஆறுகள் ஓடிக் கொண்டிருந்தன. இரண்டாறுகள் உள்ளேயும், இரண்டாறுகள் வெளியேயும் இருந்தன. இவையென்னவென்று நாயகம் ஜிப்ரயீலிடம் கேட்ட போது உள்ளிருக்கும் இரண்டாறுகள் சுவனத்து ஆறுகள். வெளியிலிருக்கும் இரண்டாறுகள் உலகத்து ஆறுகள். ஒன்று ஃபுராத். மற்றொன்று நைல்.

அதற்கு மேலே சென்ற போது ‘பைத்துல் மஃமூர்’ இருந்தது. அது பற்றி ஜிப்ரயீல் (அலை) கூறும் போது ‘ஒவ்வொரு நாளும் இங்கு 70,000 மலக்குகள் வருவார்கள். ஒரு முறை வந்தவர்கள் மீண்டும் வர மாட்டார்கள். மலக்கெனும் படைப்பு மழைத்துளிகளைப் போல எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டது என்பதை இதன் மூலம் அறிய முடிகின்றது.

நபிகளாரிடம் இரண்டு பாத்திரங்கள் கொண்டு வரப்பட்டன. ஒன்றில் பாலும், ஒன்றில் மதுவும் இருந்தன. நபிகளார் பாலைத் தேர்வு செய்து அருந்தினார்கள். அப்போது ஜிப்ரயீல் உங்களுக்கு இயற்கை மார்க்கம் வழங்கப்பட்டிருக்கிறது. நீங்கள் மட்டும் மதுவைத் தேர்ந்தெடுத்திருந்தால் உங்கள் உம்மத் வழிகேட்டில் போயிருக்கும் என்றார்கள்.

சூரத்துன் நஜ்மில் அல்லாஹு தஆலா கூறும் பொழுது ;

لَقَدْ رَأٰى مِنْ اٰيَاتِ رَبِّهِ الْكُبْرٰى

நிச்சயமாக அவர் தம்முடைய இறைவனின் அத்தாட்சிகளில் மிகப் பெரியதைக் கண்டார்.

**– அல்குர்ஆன் 53 : 18**

எனக் குறிப்பிடுவது பல முறை ஜிப்ரயீலை கண்மணி

நாயகம் கண்டிருந்தாலும் இரண்டு முறைதான் நிஜத் தோற்றத்தில் கண்டார்கள். சுமார் 600 இறக்கைகள் கொண்ட ஜிப்ரயீலின் அதிசயப் படைப்பை இமை கொட்டாமல் பார்த்தார்கள்.

சொர்க்க நரகத்தை கண்டு களித்த மாநபி (ஸல்) அவர்கள் நரகில் வேதனை செய்யப்படும் மனிதர்களையெல்லாம் கண்டார்கள். அனஸ் (ரளி) அவர்கள் அறிவிக்கக்கூடிய ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ; 'என் ரப்பு என்னை வானுலகில் பயணிக்கச் செய்த போது ஒரு சமூகத்தாரை நான் கடந்து சென்றேன். அவர்களின் நகங்கள் செம்பினால் இருந்தன. அவைகளால் தங்கள் முகங்களையும் உடலையும் கிழித்துக் கொண்டிருந்தார்கள். உடனிருந்த ஜிப்ரயீலிடம் இவர்கள் யார்? என்று கேட்டேன். இவர்கள் மனிதர்களின் மாமிசத்தை தின்றவர்கள். அவர்களைத் குறை (புறம்) பேசி வந்தர்கள்' என பதிலளித்தார்கள்.

பொதுவாக குறைகள் இல்லாத மனிதர்கள் இல்லை. குற்றங்குறைகள் இருக்கும் மனிதர்களை நாம் திருத்த முயல வேண்டும். முடியாவிடின் அவர்களின் நேர்வழிக்காக துஆச் செய்ய வேண்டும். அதை விடுத்து அந்தக் குறைகளை பின்னால் பேசுவது முறையல்ல. நல்ல முஃமினுக்கு அழகே குறைகளை மறைப்பதுதான். புறம் பேசுதல் குறித்து குர்ஆன் கடுமையாக சாடிப் பேசுகிறது.

اَيُحِبُّ اَحَدُكُمْ اَنْ يَّأْكُلَ لَحْمَ اَخِيْهِ مَيْتًا فَكَرِهْتُمُوْهُ

இறந்து போன தன் சகோதரனின் மாமிசத்தை உண்பதற்கு விரும்புவீர்களா? அதை நீங்கள் வெறுப்பீர்கள். அது போல புறத்தை புறந்தள்ளி விடுங்கள் என்கிறது குர்ஆன். இன்றைக்கு புறமென்பது பாமரர்கள் முதல் விஷயமறிந்த மார்க்க அறிஞர்களையும் விட்டு வைக்காமல் தொற்றிக் கொண்ட புற்று நோய் என்பதை நாம் கவனத்தில்

கொள்ள வேண்டும்.

மற்றொரு ஹதீஸில் ‘மிஃராஜுடைய இரவில் சில மனிதர்களின் உதடுகள் நெருப்பாலான கத்திரிக்கோல்களால் கத்தரிக்கப்படுவதை நான் கண்டேன். இவர்கள் யாரென்று கேட்ட போது உங்கள் உம்மத்தின் பிரசங்கிகள். வேதத்தை ஓதி மக்களுக்கு நன்மையை ஏவி, தங்களை மறந்து விட்டவர்கள்’ என பதிலளிக்கப்பட்டது. புரியும்படி சொல்ல வேண்டுமென்றால் ஊருக்கு உபதேசம் செய்து விட்டு தங்கள் விஷயத்தில் கோட்டை விட்டவர்கள்.

யாராக இருப்பினும் தனிநபர் சீர்திருத்தத்தை இஸ்லாம் கண்டிப்புடன் வலியுறுத்துவதைப் பார்க்கலாம். தனி நபர் ஒழுக்கமும் சரி, ஒழுக்கக்கேடும் சரி இரண்டும் சமூக ரீதியான விளைவுகள் ஏற்படுத்துவதைப் பார்க்கிறோம். திருக்குர்ஆனுடைய மூன்று வசனங்கள் கவனத்திற்குரியது.

أَتَأْمُرُونَ النَّاسَ بِالْبِرِّ وَتَنسَوْنَ أَنفُسَكُمْ وَأَنتُمْ تَتْلُونَ الْكِتَابَ ۚ أَفَلَا تَعْقِلُونَ

நீங்கள் வேதத்தையும் ஓதிக் கொண்டே (மற்ற) மனிதர்களை நன்மை செய்யுமாறு ஏவி, தங்களையே மறந்து விடுகிறீர்களா? நீங்கள் சிந்தித்து உணர வேண்டாமா?

**– அல்குர்ஆன் 2 : 44**

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا لِمَ تَقُولُونَ مَا لَا تَفْعَلُونَ، كَبُرَ مَقْتًا عِندَ اللَّهِ أَن تَقُولُوا مَا لَا تَفْعَلُونَ

ஈமான் கொண்டவர்களே! நீங்கள் நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள்? நீங்கள் செய்யாதை நீங்கள் கூறுவது அல்லாஹ்விடம் பெரிதும் வெறுப்புடையதாக இருக்கிறது.

**– அல்குர்ஆன் 61 : 2-3**

இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள் ;

மிஃராஜில் நபி (ஸல்) அவர்களுக்கு மூன்று விஷயங்கள் வழங்கப்பட்டது. அதற்கு முன்னர் எந்த நபிக்கும் வழங்கப்படவில்லை. ஐந்து நேரத் தொழுகை, பகரா சூராவின் கடைசி வசனங்கள், அல்லாஹ்விற்கு இணைவைக்காத நிலையில் அழிவில் ஆழ்த்தும் பெரும் பாவம் செய்த மனிதனுக்கு மன்னிப்பு.

மிஃராஜில் ரப்புடனான சந்திப்பும், நபிக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். மனதை அழுத்திக் கொண்டிருந்த ஆறாத ரணங்கள், பனிப் போல் விலகி ஓடியதை உணர்ந்தார்கள் உத்தமத்தூதர் (ஸல்) அவர்கள்.

மிஃராஜில் கண்ட பல்வேறு காட்சிகள், பல நபியவர்களின் சந்திப்புக்கள் என எல்லாவற்றையும் கடந்து அதன் ஹைலட் என்று பார்த்தால் தொழுகைதான். விண்ணகத்தில் தரப்பட்ட உயரிய கடமை. நபிக்கும் சரி, இந்த உம்மத்துக்கும் சரி, விண்ணகத்தில் தரப்பட்ட மாபெரும் ஆயுதம். எவ்வளவு பெயரி துன்பம் நேரிட்டாலும் இறைவனிடம் ஒப்படைக்கும் வழித்துணைச் சாதனம். உலக எல்லைகளைக் கடந்து இறைவனோடு இணைப்பை உண்டாக்கும் வயர்லெஸ் கலெக்ஷன்.

அதனால்தான் யுத்தகளத்தில் கூட தொழுகையை நிறைவேற்றும் வழிமுறையை குர்ஆன் சொல்லிக் காண்பித்தது. தொழுகையை பற்றிப் பிடித்திருக்கும் காலமெல்லாம் இந்த உம்மத்திற்கு அல்லாஹ்வின் உதவி கிடைத்துக் கொண்டே இருக்கும். உலகம் முழுக்க இன்றைக்கு இஸ்லாமிய சமூகத்திற்கு எதிரான நிலைபாடுகள் வீரியம் அடைந்ததற்கான காரணம் முஸ்லிம் சமூகத்திடம் தொழுகையில் ஏற்பட பின்னடைவுதான்.

100 பேர் வசிக்கக்கூடிய ஒரு மஹல்லாவில் 15 பேர்தான் ஃபஜ்ர் தொழுகையில் நிற்கிறார்கள். மீதம் 85 பேர்? நபியின் மிஃராஜுடைய பயணம் கற்றுத்தரும் எல்லா படிப்பினைகளையும் படித்து வாழ்வில் பயன்பெற வல்ல ரஹ்மான் தௌஃபீக் செய்வானாக! ஆமீன்.